Seafood Exporters' Association of Sri Lanka
SEASL

# நீல நீச்சல் நண்டு அறிக்கை இலக்கம் 3

***2015 தை மாதம் முதல் ஆனி மாதம் வரை***

*இலங்கையின் கடலுணவு ஏற்றுமதியாளர் சங்கத்தின் (Seafood Exporters' Association of Sri Lanka's (SEASL) )நீல நீச்சல் நண்டு அறிக்கையின் மூன்றாவது பதிப்புக்கு உங்களை வரவேற்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம். இலங்கை நீல நீச்சல் நண்டுத் (SLBSC) கடற்றொழிலை முன்னேற்றுவதற்காக நாம் ஆறு மாதங்களாக மிக ஈடுபாட்டைக் கொண்டிருந்தோம். பூநகரி மீனவ கூட்டுறவு சங்க யூனியனால் இரண்டு இருப்பு மதிப்பீடு பூர்த்தியாக்கப்பட்டது. தேசிய நீர் வள மூலங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் SLBSC கடற்றொழிலின் உயிரியல் தொகை பற்றி ஆராய்ச்சிக் கற்கையை தொடர்ந்தது. ஊவா வெலச பல்கலைக்கழகத்திலிருந்து மாணவர்கள் கடற்றொழில் முன்னேற்ற செயற்திட்டத்தில் (FIP) சேர்ந்தனர். மேலும் கடற்றொழில் நீரக வளமூலங்கள் திணைக்களமும் எல்லாப் பெரிய SLBSC மீன்பிடிக்கப்படும் இடங்களிலும் மீன்பிடிக்கும் முயற்சிக்கான கற்கையை ஆரம்பித்தது. எல்லா இந்த செயற்பாடுகளும் இன்னும் பலவும் நீல நீச்சல் நண்டு அறிக்கையின் மூன்றாவது பதிப்பில் காணப்படலாம். அறிக்கையும் ' முன்னேற்றம் ' அடைந்துள்ளது. புதிய ஒழுங்கமைவானது நிலையான கடற்றொழிலுக்கான சர்வதேச பணிமுறைகளால் மதிப்பீடு செய்யப்படும் பிரதான தன்மைகளை பிரதிபலிக்கின்றது.*

## இலங்கைக் கடற்றொழில் உயிரின இருப்பின் நிலையை முன்னேற்றுவது



கடற்றொழிலின் நிலையான தன்மையை முன்னேற்றுவதில் ஒரு தீர்க்கமான முதல் படியாக இலங்கையிலுள்ள இருப்பின் (இருப்புகளின்) உயிரியல் நிலைமையை விளங்கிக்கொள்வது தீர்க்கமானதாகும். கடந்த வருட இறுதியில் FIP ஆனது மன்னார் வளை குடாவில் (புத்தளம் ஏரி ) ஒரு நீண்ட அடிப்படையிலான முட்டையிடும் வலுவாய்ப்பு முறையை உபயோகித்து ஒரு மதிப்பீட்டை நிறைவேற்றியது. மாசி மற்றும் பங்குனி மாதங்களில் பூநகரி FCSU ஆனது கிளிநொச்சி மற்றும் மன்னார் கடற்கரைகளுக்கு அப்பால் SLBSC க்கான மீன்பிடிக்கப்படுகின்ற இடங்களில் மேலும் இரண்டு மதிப்பீட்டை நிறைவேற்றியது. SEASL ஆல் பாக்கு நீரிணையில் யாழ்ப்பாணக் கடற்கரைக்கு அப்பால் நீல நீச்சலை விபரித்து தரவால் LB SP தொழில்நுட்ப உதவி வழங்கப்பட்டதுடன் NARA ஆல் தொடர்ந்து சேகரிக்கப்படவுள்ளது (கீழே பார்க்க).




பிடிபடுவதென்றால் என்ன? (வலது பக்கம் பார்க்க), மீனவ குடும்பங்கள், மன்னார் வளை குடாவில் (புத்தளம் ஏரி) SEASL மற்றும் NARA மற்றும் வங்கான விரிகுடாவில்(பாக்கு விரிகுடா)உள்ள மூன்று மீன்பிடிக் கடலிலும் சேகரிக்கப்பட்ட LB SP தரவைப் பகுப்பாய்வு செய்வதற்கு ஒரு இலவச LB SP ஆனது தரவு குறைவான கடற்றொழிலுக்கான மதிப்பீட்டு மென்பொருள் பிரயோகம் உபயோகப்பட்டது. 'பிடிபடுவது என்றால் என்ன?' மேற்கு அவுஸ்திரேலியாவில் முர்டொக் பல்பலைக்கழகத்தில் , கடற்றொழில் மற்றும் கடற்றொழில் ஆராய்ச்சி நிலையத்தில் கலாநிதி. ஜெறெமி பிறின்ஸ் மற்றும் அவரது சகாக்களால் LB SP விஞ்ஞான ஆராய்ச்சியை 20 வருடங்களுக்கு மேலாக செய்யப்பட்ட வளரும் உற்பத்தியாகும்.

மன்னார் வளைகுடா மற்றும் வங்காள வரிகுடாவில் இலங்கை நீல நீச்சல் நண்டின் இருப்புக்கான (இருப்புகள்) நம்பிக்கையான எல்லைகளுடன் முட்டையிடும் வலுவாய்ப்பு (SPR[1]) இருப்பு (இருப்புகளின்) அந்தஸ்து தற்போது நிலையானதெனக் காட்டுகின்றது. SLBSC க்கான பிரதான அளவுகோள்களுக்காக பகுப்பாய்வுகள் உருவாக்கப்பட்டன. (அதாவது., $M/k = 1.5$; $L_{50} = 95$ mm; $L_{95} = 135$; $L_{inf} = 170$ mm மற்றும் $^{\beta} = 3$). இந்த அளவுகள் தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியா மற்றும் அவுஸ்திரேலியாவிலும் BSC இன் வாழ்க்கை வரலாறு பற்றிய விஞ்ஞான ரீதியான இலக்கியத்தின் மீளாய்விலிருந்து பெறப்பட்டன. மேலும் BSC க்கான வாழ்க்கை வரலாற்று அளவுகோல்களின் பொருத்தம் பற்றியும் Dr. Adrian Hordyck ( முர்டொக் பல்கலைக்கழகம்) என்பவருடனான கலந்துரையாடலிலிருந்தும் பெறப்பட்டது

| SLBSC Stock(s) | Crabs | SP | CL |
|---|---|---|---|
| **மன்னார் வளைகுடா** | | | |
| புத்தளம் ஏரி | 3,115 | 59% | 2.2% |
| **வங்காள விரிகுடா** | | | |
| *மன்னார்* | 2,015 | 39% | 0.8% |
| *கிளிநொச்சி* | 4,087 | 54% | 0.4% |
| *யாழ்ப்பாணம்* | 5,902 | 61% | 0.4% |

---

*[1] மின்பிடிப்பதில் தரப்பட்ட மட்டத்தில் விடுபட்ட மீன்பிடிக்கப்படாத வலவாய்ப்பான இனப்பெருக்கத்தின் விகிதாசாரமாக முட்டையிடும் வலுவாய்ப்பு கருதப்படுகின்றது. SPR க்கான சதவீதப் பெறுமதியைப் பெறுவதற்கு இது 100 ஆல் பெருக்கப்படுகின்றது.*

| குறிப்புக்கான புள்ளிகள் | Generic SPR Values |
|---|---|
| Limit Reference Point | 20% |
| Lower (Target) MSY | 30% |
| Upper (Target) MSY | 40% |
| Precautionary MSY / MEY | 50% |
| *Precautionary / Rebuild SPR* | *60%* |

SLBSC இன் உயிரியல் தொகையின் விஞ்ஞான ரீதியான கற்கையை NARA பூர்த்தி செய்தபின்பு SLBSC க்கான பிரதான வாழ்க்கை வரலாற்று அளவுகோல்களுக்கான உண்மையான பெறுமதிகளை உபயோகித்து மன்னார் வளைகுடா மற்றும் வங்காள விரிகுடாவில் SLBSC க்கான The SPR மீண்டும் கணிக்கப்படும் (கீழே பார்க்க). LB SP மதிப்பீட்டின் விளைவுகள் நிலையான கடற்தொகுதிகளுக்காக1 (வலப்பக்கமாகப் பார்க்க) பொதுப்படையான பிரதான குறிப்பான SPR பெறுமதிகளுடன் ஒப்பிடுகையில் SLBSC இருப்புக்களின் உயிரியல் அந்தஸ்தின் சிறந்ததொரு புரிந்துணர்வை FIP க்கு வழங்குகின்றது. கடற்றொழில்[1] (வலப்பக்கம் பார்க்க). மன்னார் வளைகுடா மற்றும் வங்காள விரிகுடாவில் மூன்று வந்தடையும் நிலையங்களில் இரண்டுக்கான தற்போதைய ஏற்பாட்டுக்கமைய SLSBC க்கான SPR ஆனது முன்னெச்சரிக்கையான MSY/ உச்ச பொருளாதார வருவாய்க்கு மேலாகும். மன்னாரில் SLSBC மீன்பிடி நிலங்களுக்கான SPR உயர் (இலக்கு)உச்ச நிலையான வருவாய்க்கு சிறிது கீழேயாகும்.



தை மற்றும் ஆனி மாதங்களுக்கிடையில் NARa வின் கடல்சார் மூலவளங்கள் முகாமைத்துவப் பிரிவின் முதன்மை விஞ்ஞானியான கலாநிதி சிசிறா ஹப்புதந்திரியும் மற்றும் அவரது பணியினரும் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள நாலு மீனவ கிராமங்களிலிருந்து 18,000 நண்டுகளுக்கு மேலாக மாதிரியாக உபயோகித்தனர். 400 க்கும் மேலான நண்டுகள் மேலும் பகுப்பாய்வு செய்வதற்காக ஆய்வுகூடத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டன. நீளம் / நிறை தொடர்பு ; வளர்ச்சி ; இறப்பு ; முதிர்வின்போது அளவு ; இனப்பெருக்கம் ; முட்டையிடும் பருவம் ; LB SPPR மற்றும் உணவு ஆகியவற்றை கலாநிதி. ஹப்புதந்திரி அவர்களால் அளவீடு செய்யப்பட்ட பிரதான முழுத்தொகையினது அளவுகோல் உள்ளடக்குகின்றது. 2015 ஆனி மாதத்தில் NARA ஒரு இடைக்கால அறிக்கையை SEASL க்குச் சமர்ப்பித்தது. SLSBC இன் இறுதி அறிக்கை கடற்றொழில் உயிரியலையும் முழுத்தொகையையும் விபரித்து 2015 மார்கழி மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பு சமர்ப்பிக்கப்படும்.

ஆனி மாதத்தில் ,ஊவா வெலச பல்கலைக்கழகத்தின் இறுதி ஆண்டு மாணவியான அஜந்தா அபயகுணவர்த்தன மன்னார் மாவட்டத்தில் (வலப்பக்கம் பார்க்க) SLBSC இன் இனப்பெருக்க உயிரியல் பற்றிய மூன்று மாத கற்கையை ஆரம்பித்தார். ஊவா வெலச பல்கலைக்கழகத்தின் மிருக விஞ்ஞானம் மற்றும் ஏற்றுமதி விவசாய பீடாதிபதியான கலாநிதி.செபலிக ஜெயமானவினால் Ms. அபயகுணவர்த்தன மேற்பார்வை செய்யப்படுகின்றார். பிரயாணம், தங்குமிடம், உணவு மற்றும் ஆராய்ச்சிப் பொருட்களுக்கான செலவுக்காக அருாய்ச்சி உதவு நிதி Ms. அபயகுணவர்த்தனாவுக்கு SLBSC கடற்றொழில் முன்னேற்ற செயற்திட்டம் வழங்கியது.



## கடற்றொழிலின் சுற்றுச்கூழல் நிலையை முன்னேற்றுதல்

மோன்ரேறி குடா நீர் உயரினக்காட்சியின் கடலுணவு வோச் மற்றும் கடல்சார் நீர் உயரினக் காட்சி பேரவை போன்ற சர்வதேச நிறுவனங்களும் முகவர்களும் நிலையாக கடற்றொழிலை நோக்கி கடற்றொழில் முன்னேற்றச் செயற்திட்டத்தை மூன்று வழியில் கடற்றொழிலின் மூன்று மட்டத்தில் சுற்றுச்கூழல் அந்தஸ்தை மதிப்பீடுசெய்து வழிசெலுத்த முன்னணியில் நிற்கின்றனர். முதலாவதாக அவர்கள் இலக்கு வைக்காத ஆனால் தற்செயலாகப் பிடிபடும் வகைகளில் கவனத்தைச்செலுத்துகின்றனர். (அதாவது., இடையே பிடிபடுபவை).இரண்டாவதாக அவர்கள் கடல் வாழ் இனங்களில்(உ.ம். கடல் தாவரங்கள், பவளங்கள் மற்றும் கடல் புற்படுக்கையின்மேல்) கடற்றொழிலின் தாக்கத்தை மதிப்பீடு செய்கின்றனர். இறுதியாக அவர்கள் கடல்சார் சுற்றுச்சூழலில் கடற்றொழிலின் தாக்கத்தை மதிப்பீடு செய்கின்றனர்.

வைகாசி மாதத்தில் SLBSC கடற்றொழிலின் சுற்றுச்சூழல் தாக்கத்தை அராய்ச்சி செய்வதற்குத் திட்டங்களை வகுத்தனர். ஊவா வெலச பல்கலைக்கழகத்தில்(பதுளை)மிருக விஞ்ஞான மற்றும் ஏற்றுமதி விவசாய பீடத்தில் FIP பணியணியினரையும் இறுதி ஆண்டு மாணவர்களையும் சந்தித்தது. மேலும் FIP ஓஷன் பல்கலைக்கழகத்தில் பணியணியினருக்கும் இறுதி ஆண்டு மாணவர்களுக்கும் SLBSC FIP பற்றி உரையாற்றுவதற்கு தங்காலைக்குச் சென்றனர். இந்தச் சமர்ப்புரைகளும் அதைத்தொடர்ந்த கலந்துயைாடல்களும் SLBSC கடற்றொழில் முன்னேற்றச் செயற்திட்டத்தின் ஒன்று அல்லது அதற்கு மேலான தன்மைகளுக்கு ஆதரவாக கடற்றொழிலின் சூற்றுச்சூழல் அந்தஸ்து உட்பட ஆராய்ச்சியைப் பணியணியினரும் இறுதியாண்டு மாணவர்களும் நடாத்துவதற்குத் தைரியமூட்டும்



2015 ஆனி மாதத்தில் மன்னார் மாவட்டத்தில் இலக்கு வைக்கப்படாத வகைகளின் மேலான SLBSC கடற்றொழிலின் தாக்கத்தின் மேல் தனது இறுதி ஆண்டு அராய்ச்சியை ஊவா வெலச பல்கலைக்கழகத்தில் இறுதி ஆண்டு மாணவியாயான வத்சலா டொலவத்த ஆரம்பித்தார் (வலது பக்கம் பார்க்க) .வத்சலாவை ஊவா வெலச பல்கலைக்கழகத்தின் மிருக விஞ்ஞான மற்றும் ஏற்றுமதி விவசாய பீடாதிபதியான கலாநிதி செபலிக ஜெயமான்ன மேற்பார்ா செய்கின்றார்.

ஆவணி மாதத்தில் மன்னார் வளைகுடாவில் (புத்தளம் ஏரி ) இலக்கு வைக்கப்படாத வகைகளைப்பற்றிய SLBSC கடற்றொழிலின் தாக்கம் பற்றிய ஆராய்ச்சியை ஓஷன் பல்கலைக்கழக இறுதி ஆண்டு மாணவரான எரங்கா குணசேகரா ஆரம்பிப்பார். எரங்கவை ஓஷன் பல்கலைக்கழகத்தின் கடற்றொழில் மற்றும் கடல்சார் விஞ்ஞான பீட சிரேஸ்ட விரிவுரையாளரான கலாநிதி. எம். எம் . Fairoz மேற்பார்வை செய்வார். FIP க்கு ஆதரவு தெரிவித்தமைக்காக இந்த மாணவர்கள் எல்லோருக்கும் அவர்களது மேற்பார்வையாளர்களுக்கும் SEASL மிகவும் நன்றியாக உள்ளது. SLSBC கடற்றொழிலின் எல்லா தன்மைகளின்மேலும் ஆராய்ச்சியை மேற்கொள்ளுவதற்கு FIP தொடர்ந்து பட்டதாரிகளுக்கும் பட்டப்பின் படிப்பு மாணவர்களுக்கும் பணியணியினருக்கும் தைரியத்தைக்கொடுக்கத் திட்டமிடுகின்றது.


## SLBSCகடற்றொழிலின் முகாமைத்துவத்தை முன்னேற்றல்

SLBSC இன் உயிரியல் அந்தஸ்து தொடர்ந்து நிலையானதாக' இருக்கவும் கடற்றொழிலின் சுற்றுச்சூழலின் தாக்கங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்க மட்டத்தில் பராமரிக்கப்படவும் உறுதிப்படுத்துவதற்காக இலகுவாகவும் பயனுறுவிளைவுமிக்க விதிகள் மற்றும் கருவிகளுடன் ஒரு கட்டுப்பாடுடைய தந்திரோபாயத்தை திட்டமிடவும் அமுல்படுத்துவதற்குமான தேவை FIP க்கு உள்ளது. SLBSC கடற்றொழிலுக்குக் குறிப்பாக உள்ள ஒரு புதிய பிரமாணம் தேவைப்படலாம். இதனுடன் கட்டுப்பாட்டுக் கருவிகளை அமுல்படுத்தக்கூடிய ஆலொசனை கூட்டு-முகாமைத்துவ கட்டுமாணமும் இருக்கவேண்டும். இந்தக் கட்டுமாணம் கடற்றொழிலின் உயிரியல் மற்றும் சுற்றுச் சூழலின் நிலையான தன்மையைப் பாதிக்கும் முகாமைத்துவ காரணிகளைக்கு பயனுறு விளைவுமிக்க முகாமைத்துவத்தை வழங்க மீனவ சமூகங்களின், உற்பத்தியாளர்கள் அறிவு , அனுபவம் மற்றும் செயற்திறமைகளை இணைக்கவேண்டும்.

| Fishery | Fishermen | LC | Craft |
|---|---|---|---|
| **Gulf of Mannar** | | | |
| Puttalam | 1,744 | 35 | 1,027 |
| **Bay of Bengal** | | | |
| Mannar | 1738 | 17 | 603 |
| Kilinochchi | 310 | 6 | 155 |
| Jaffna | 432 | 19 | 696 |
| | **4,224** | **77** | **2,481** |

ஆனி மாதத்தில் DFAR இன் அலுவலகர்கள் மற்றும் பணியணியினர் நாலு மாவட்டத்தில் SLBSC கடற்றொழிலின் ஒரு முயற்சி அளவீட்டை அமுலாக்க ஆரம்பித்தனர். இந்த அளவீடு வங்காளவிரிகுடா பெரிய கடல்சார் சுற்றுச்சூழல் முறையால் இணைந்து நிதியிடப்படுகின்றது. (BOBLME). DFAR இன் சிரேஸ்ட ஆலோசகரான திரு. லெஸ்லி யோசப் அவர்களால் தொழில்நுட்ப உதவி வழங்கப்படுகின்றது. அளவீட்டுக்கான வினாக்கொத்து தயாரிக்கப்பட்டு FIP உடன் கலந்துரையாடப்பட்டது. அதன் பின்பு நாலு மாவட்டங்களிலும்( வலது பக்கம் பார்க்க) 77 BSC மீனவக் குடும்பங்களுடன் அளவீட்டை பூர்த்தி செய்ய திட்டங்கள் வரையப்பட்டன. அளவீட்டு விளைவுகளின் அடிப்படையில் DFAR மற்றும் FIP ஏனைய அங்கத்தவர்கள் வயம்ப பல்கலைக்கழகத்தில் கலாநிதி செவந்தி ஜெயக்கொடியின் தொழில்நுட்ப உதவியுடன் கடற்றொழில் முகாமைத்தவ திட்டத்தை உருவாக்குவார்கள். தயாரிக்கப்பட்ட கடற்றொழில் முகாமைத்துவ திட்டம் கடற்றொழில் முகாமைத்துவத்துக்கான BOBLME இன் சுற்றுச் -சூழல் முறை அணுகுமுறையை உபயோகித்து அபிவிருத்தி செய்யப்படும்.

SLBSC கடற்றொழிலை முன்னேற்றுவதற்கு FIP இன் முயற்சிகளுக்கு முகங்கொடுக்கும் மிகப்பெரிய சவாலாக தற்போது வட இலங்கையில் SLSBC மீனவர்கள் மீனவர்கள் மீன்பிடிக்கும் கடலில் இடைவிடாது சட்டவிரோதமாக தமிழ்நாட்டு இழுவைப்படகுகளின் மீன்பிடித்தல் உள்ளது. இலங்கைக் கடற்பரப்பில் சட்டவிரோதமாக மீன் பிடிப்பதற்கு வங்காள விரிகுடாவில் இலங்கை மற்றும் இந்திய கடற்பரப்பைப் பிரிக்கும் சர்வதேச கடல்சார் எல்லைக்கோட்டைத்தாண்டி ஒவ்வொரு கிழமையும் மூன்று தடவைகள் 700 க்கு மேலான இந்திய இழுவைப்படகுகள் வருகின்றன.(வலது பக்கம் RADAR படத்தைப் பார்க்க ).இலங்கை மற்றும் இந்திய அரசாங்கங்களின் இராஜதந்திர முயற்சிகள் இருந்தபோதும் இலங்கைக். கடற்பரப்பில் இந்திய இழுவைப்படகுகளால் சட்டவிரோத மீன்பிடிக்கப்படுதலைத் தடுக்க இது வரை தமிழ்நாட்டு அரசு தவறிவிட்டது.




ஒவ்வொரு கிழமையும் மூன்று இரவுகளுக்கு வடஇலங்கை மீனவர்கள் தங்களது மீன்பிடி நிலங்களுக்குச் செல்லும் உரிமையை சட்டவிரோதமான முறையில் இந்திய இழுவைப்படகுகள் மீன்பிடிப்பது தடுக்கின்றது. ஒவ்வொரு வருடமும் பல ஆயிரம் தொன்கள் இறால்கள், கடலட்டைகள் , நண்டுகள் , கணவாய் மற்றும் மீனைப் பிடிக்கவும் ஏற்றுமதிசெய்யவும் உள்ள உரிமையை இது வடஇலங்கை மீனவர்களுக்கும் இலங்கை கடலுணவுக் கம்பனிகளுக்கும் மறுக்கின்றது. இந்திய இழுவைப் படகுகளால் சட்டவிரோதமாக இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிப்பதுபிரதாள கடல்வாழ் உயிரினங்களை அழிக்கின்றது. SLBSC கடற்றொழில் நிலைத்திருப்பதற்கு இலங்கைக் கடற்பரப்பில் சட்டவிரோதமாக தமிழ்நாட்டு இழுவைப்படகுகளின் சட்டவிரோதமான மீன்பிடித்தல் ஒரு பிரதான அச்சுறுத்தலாகும்.

வட இலங்கை மீனவர்கள் சார்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பங்குனி மாதத்தில் சந்தக ஜெயசுந்தர,(சட்டத்தரணி) சிந்தக பர்னாந்துடனும் விஷ்மி பர்னாந்துடனும், k.உபேந்திர குணசேகரவின் அறிவுறுத்தலுடன் (சட்டத்தரணி) ஒரு மனுவைத் தாக்கல் செய்தனர். இந்திய இழுவைப்படகுகளால் இலங்கைக் கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடித்தல் தொடர்பாக சட்டமா அதிபரின் எடுக்கப்படும் சட்ட நடவடிக்கை பற்றி நீதிமன்றத்தின் கவனத்தை மனுவேண்டி நின்றது. மீனவர்களின் மனுவை நீதிமன்றம் நிராகரித்தது. மீனவர்கள் உயர் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்தனர். ஆடி மாதம் 10 ஆம் திகதி மேன்முறையீடு விசாரணைக்கு எடுக்கப்படும்.



இலங்கைக் இழுவைப் படகுகளினால் சட்டவிரோதமாக மீன்பிடிப்பது SLBSC கடற்றொழிலுக்கு மேலும் ஒரு அச்சுறுத்தலாகும் இலங்கை கடற்பரப்புகளில் சட்டவிரோதமாக இழுவை வலைகளை உபயோகிக்க ஆரம்பிப்பதற்கு இந்திய இழுவைப்படகுகளினால் அமுல்படுத்தப்பட்ட ‘மூன்று நாள் மீன்பிடித் தடையின்’ பயனை இலங்கை இழுவைப்படகு உரிமையாளர்கள் எடுத்துக்கொண்டனர். 1996 இன் உள்நாட்டு கடற்றொழில் முகாமைத்துவ பிரமாணங்களின் பிரிவு 4 இன் கீழ் முகத்துவாரரங்களிலும் ஏரிகளிலும் மீன்பிடிப்பது தடைசெய்யப்படுகின்றது. 2015 சித்திரை மாதத்தில் ,வெறைற் (verite) ஆராய்ச்சியின் அடிப்படையில் கடற்றொழில் நீரக வளமூலங்கள் சட்டத்துக்கு கௌரவ. M. A. சுமந்திரன் (MP) ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார். கடற்கரைப் பகுதிகளில் இலங்கை வள்ளங்களால் இயந்திர இழுவைப்படகுகளின் தொழிற்பாட்டைத் தடைசெய்வதற்கு திருத்தம் வேண்டி நிற்கின்றது.

ஆனி மாதத்தில், இலங்கையின் முன்னணி நண்டு உற்பத்தியாளர்களில் ஐந்து கடல் உற்பத்தியாளர்களான தபரபோன் கடலுணவு, அல்பெக்ஸ் மறைன் ( Alpex Marine), புறோன் சிலோன் (Prawn Ceylon) , சிலோன் கைச் (Ceylon Catch) மற்றும் P.N.பர்னாந்து –இலங்கைக் கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடித்தலிலிருந்து இந்திய மற்றும் இலங்கை இழுபைபடகுகளைத் தடுப்பதற்கு வலுவான நடவடிக்கை எடுப்பதற்கு கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்டு ஒரு மனுவை ஆரம்பித்தனர். 2015 ஆம் ஆண்டு 17 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்குப் பின்பு புதிய அமைச்சரிடம் மனு கையளிக்கப்படும். மேலும் ஆனியில், உவா வெலிச பல்கலைக்கழக பல்கலைக்கழகத்திலிருந்து இறுதி மாணவனான M. B. சூசை மன்னார் மாவட்டத்தில் பாரம்பரிய கடற்றொழிலின்மேல் இந்திய இழுவைப்படகுகளின் தாக்கங்கள் பற்றிய ஒரு வெளிக்களக் கற்கையை ஆரம்பித்தார். உவா பல்கலைக்கழகத்தில் மிருக விஞ்ஞானம் மற்றும் ஏற்றுமதி விவசாய பீடத்தின் ஆராய்ச்சி இணைப்பாளர் Mr. P. P. L.நுவான் ஆல் M. B. சூசை மேற்பார்வை செய்யப்படுகின்றார்.

கடற்றொழில் முன்னேற்றச் செயற்திட்டங்களுக்காக பங்குனி மாதத்தில் MSC இன் ஈடுபாட்டு அலவலகரான Cassie leisk என்பவரை SEASL இலங்கைக்கு சூழல்-பட்டியிடல் பற்றி MSC சான்றிதழ் மற்றும் MSC இன் கடற்றொழில் நியமம் பற்றியும் இரு நாள் நிகழ்ச்சியை நடத்துவதற்கு வரவேற்றது. முன்னணி கடலுணவுக் கம்பனிகளிலிருந்து முப்பது நிபுணர்களுடன் DFAR மற்றும் NARA உடன் பல்கலைக்கழக கல்விமான்களும் மாணவர்களும் நிகழ்ச்சியில் பங்குபற்றினார்கள். SLBSC கடற்றொழிலின் சுற்றுச் சூழல் தாக்கங்களை மதிப்பீடு செய்வதற்கு MSC இன் இடர் அடிப்படையிலான கட்டுமானத்தை நிகழ்ச்சி உள்ளடக்கியது.




***2015 இல் FIP ஐ முன்னோக்கி நகர்த்தல்*** *: தேசிய கடற்றொழில் நிறுவக நண்டு பேரவை (SEASL மைய நிதியிடல்) ; பொருளாதார அபிவிருத்தி செயற்திட்டம்( கிளி சர்வதேச தொழில் நிறுவனத்தின் உள்நாட்டு அதிகாரப்படுத்தல் (கிளிநொச்சி FCSU உடன்) மற்றும் வங்காள விரிகுடா கடல்சார் சுற்றுச்சூழல் நிகழ்ச்சி (DFAR) என்பவையிடமிருந்து நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியின்றி மேலே விபரிக்கப்பட்ட* SLBSC கடற்றொழிலுக்கான சாத்தியப்பட்டிருக்காது. FIP இன் அங்கத்தவர்கள் இந்த ஒவ்வொரு நிறுவனங்களுக்கும் அவர்களின் பணியாளருக்கும் SLBSC கடற்றொழிலை முன்னேற்றுவதற்கான அவர்களின் ஆதரவுக்கும் உதவிக்கும் மிகவும் நன்றியாக உள்ளனர். NFI CC, LEED செயற்திட்டம் மற்றும் BOBLME உடன் ஏனையSLBSC கடற்றொழிலை முன்னெற்ற அக்கறையுள்ள தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடனும் சேர்ந்து தொழிலாற்றுவதற்கு எதிர்பார்க்கின்றது.

*நீல நீச்சல் நண்டு அறிக்கையின் பிரதிகள் (இலக்கங்கள். 1, 2 மற்றும் 3) ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழிலும் பிரதான FIP ஆவணங்கள் (அதாவது., திட்டம்,, பாதீடு மற்றும் செயற்பாட்டு கண்காணிப்பு ) SEASL வலைத்தளத்தில் 2015 ஆடி மாத இறுதியில் கிடைக்கும்.([www.seasl.lk](http://www.seasl.lk)) மேலும் விபரங்களுக்கும் அல்லது SLBSC FIP பற்றி தெளிவுபெறுவதற்கும் தயவுசெய்து [oddfish@slt.lk](mailto:oddfish@slt.lk) க்கு மின்னஞ்சல் செய்க.*